**நாகப்பட்டினம் மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை : இரா. பன்னீர்செல்வம், பி.காம்.,**

**துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர்,**

ந.க.04/2022/அ1, நாள்: 08.02.2022

**பொருள்** : பொதுப்பணிகள் - கூட்டுறவுத்துறை - தமிழ்நாடு அமைச்சு பணி - தொகுதி IV பணிகள் - 2018-2019 மற்றும் 2019 - 2020 - திரு.சு.ரஞ்சித்குமார், இளநிலை உதவியாளர் - பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடல் - தொடர்பாக.

**பார்வை** :

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலக இணைப்பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்), சென்னை அவர்களின் கடிதம் ந.க.11800/2020/பதொ3(1), நாள் : 24.07.2020
2. நாகப்பட்டினம் மண்டல இணைப்பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.1794/2020/அ1, நாள் : 29.07.2020

**********

ஆணை:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV பணிகள், 2018-2019 மற்றும் 2019 - 2020 க்கான நேரடி நியமனம் மூலம் திரு.சு.ரஞ்சித்குமார், இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பார்வை (1) – இல் காணும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலக இணைப்பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்), சென்னை அவர்களின் கடிதம் வழி நாகப்பட்டினம் மண்டல கூட்டுறவுத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (2) – இல் காணும் நாகப்பட்டினம் மண்டல இணைப்பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி தனியர் இணைப்பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 05.08.2020 முற்பகல் முதல் பின்வரும் நிபந்தனைக்கு உட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மாண்பமை சென்னை / மதுரை கிளை உயர்நீதிமன்றத்தில் 2018-2019 மற்றும் 2019-2020 தொகுதி IV-இல் குறிப்பிட்ட பணிகளுக்கான நிலுவையிலுள்ள ரிட் மனுக்களில் இறுதி முடிவுக்குட்பட்டு வரன்முறை படுத்தப்படும்.

| வ. எண் | பெயர் | தேர்வாணைய வரிசை எண் | தேர்வாணைய பதிவு எண் | பணியேற்பு நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.சு.ரஞ்சித்குமார் | 16 | 2402002231 | 05.08.2020 முற்பகல் | 05.08.2020 முற்பகல் |

இவர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு கால தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் இருப்பார் எனவும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியை நிறைவு செய்த பின்னர் தகுதிகாண் பருவம் முடித்ததற்கான ஆணைகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

8/2/22

**துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர்,**

**நாகப்பட்டினம்**

பெறுநர் :

திரு.சு.ரஞ்சித்குமார்,
இளநிலை உதவியாளர்,
இணைப்பதிவாளர் அலுவலகம், நாகப்பட்டினம்.

8.2.22

நகல் 1) இருப்புக்கோப்பு-2022

2) பணிப் பதிவேடு